Mahatma Gandhi Memorial Tubarculosis Sanatorium, Segipatti

11Q.— Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government are aware of the serious allegations made regarding the maladministration in Mahatma Gandhi Memorial Tuberculosis Sanatorium, Sengipatti; and

(b) if so, whether there is any proposal to appoint an Enquiry Committee to go into the matter?

A.— (*a*) Certain complaints have been received against the administration of Mahatma Gandhi Memorial T. B. Sanatorium which is under private management.

(*b*) They were examined by Government and they were found to be baseless.

(அ) செங்கிப்பட்டியில் தனியார் பராமரிப்பிலுள்ள மகாத்மா காந்தி நினைவு காசநோய் நிலையத்தின் நிர்வாகத்தில் தவறுகள் பற்றி சில புகார்கள் அரசிற்கு வந்துள்ளது.

(இ) அவைகளை அரசு ஆய்வு செய்தது. ஆதாரமற்றவை எனக் கருதுகிறது.

2. அரசின் தீர்மானம்.

வினு நேரம் கைவிடப்படுதல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைக்கு ஒரு தகவல். இன்று ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில், எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையும், முதல்வருடைய பதிலுரையும் இருப்பதால் வினு நேரத்தை ரத்து செய்து மற்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அவையின் அபிப் பிராயத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: தலைவர் அவர்களே, "சட்ட மன்ற மேலவையின் விதி 22-ன் கீழ் கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு அவையின் முன்னவர் அவர்களுடைய வேண்டுகோளை எல்லாக் கட்சித் தலைவர் களும் ஏற்றுக்கொண்டால் நாங்களும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

[1978 செப்டம்பர் 14

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :

''சட்ட மன்ற மேலவையின் விதி 22-ன் கீழ் கேள்வி நேரம் கைவிடலாம்''.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

3. உரிமைப் பிரச்சினை

(1) உறுப்பினர்கள் திருவாளர்கள் அப்துல் வகாப், வசந்த பை ஆகியோர் எழுப்பிய உரிமைப் பிரச்சினைகளின் மீது தீர்ப்பு.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அப்துல் வகாப், திரு. வசந்த பை ஆகியவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினையின் மீது எனது தீர்ப்பை இன்று அறிவிக்கிறேன் என்று அறிவித்தேன். ஆனால் இது நன்கு பரிசீலிக்க வேண்டியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளார்கள். நீதி மன்றத்தில் 'அஃபிடவிட்' சம்பந்தமாக உள்ளவைகளையெல்லாம் பரிசீலிக்க வேண்டும். நீதி மன்றமும் இழுக்கப்பட்டிருப்பதால்' இது குறித்துத் தீர பரிசீலித்து தீர்ப்பை வழங்குவது எனது கடமையாகும். ஆகவே எனது தீர்ப்பை அடுத்த கூட்டத்திலே அறிவிக்கிறேன்.

(2) மேலவை முன்னவர் வக்ஃப் போர்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை குறித்து, உறுப்பினரின் கூற்றுப்படி கொடுத்த தவறான தகவல் குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அடுத்து, இரண்டாவது உரிமைப் பிரச்சினை. திரு. அப்துல் வகாப் அவர்கள் மேலவை முன்னவர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்ப முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். உரிமைப் பிரச்சினை என்பது, அண்மைக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். பிப்ரவரி மாதத்தில் நடந்த நிகழ்ச்சியைக் குறித்து, இப்போது எழுப்புவதானது, உரிமைப் பிரச்சினையின்கீழ் வராது என்று விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இருப்பினும் இது குறித்து அவையின் முன்னவர் என்ன சொல்லுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. இராசா முகமது: தலைவர் அவர்களே' மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் என் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அவைக்கு நான் ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறேன் என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது காலம் கடந்தது என்றும்